# இலங்கையில் வெளிவந்த தமிழ் மருத்துவ நூல்கள் – ஓர் ஆய்வு

*மருத்துவர் சே. சிவசண்முகராஜா எம்.டி(சித்தா)*
முதுநிலை விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கைதடி, இலங்கை

மலர்: 4
இதழ்: 3
மாதம்: ஜனவரி
வருடம்: 2020
P-ISSN: 2454-3993
E-ISSN: 2582-2810

## ஆய்வுச்சுருக்கம்

*இலங்கையில் இராவணனின் பாட்டனான புலத்தியர் காலத்திலிருந்தே மருத்துவநூல்கள் தோற்றம் பெற்றுள்ளதை அறியக் கூடியதாகவுள்ளது. ஆயினும். யாழ்ப்பாணத் தமிழரசர்களான பரராசசேகரமன்னன், செகராசசேகரமன்னன் காலத்தில் தமிழ் மருத்துவ நூல்கள் பல இயற்றப்பட்டுள்ளன. மிகப்பெரும் வைத்தியநூல்களான பரராசசேகர வைத்தியம், செகராசசேகர வைத்தியம் என்பன இக்காலத்தில் ஆக்கப்பட்டவையாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து ஏட்டுச்சுவடிகளிலிருந்த வைத்திய நூல்கள் அச்சில் பதிப்பிக்கப்படலாயின. தமிழ் வைத்திய நூல்களை அச்சிற்பதிப்பித்தவர்களில் அச்சுவேலி ச.தம்பிமுத்துப்பிள்ளை, ஏழாலை ஐ.பொன்னையாபிள்ளை என்போர் குறிப்பிடத்தக்கவர்களாவர். இலங்கையில் வெளிவந்துள்ள தமிழ் வைத்தியநூல்கள் பொதுமருத்துவ நூல்களாக மட்டுமன்றிக் கண் மருத்துவம், குழந்தை மருத்துவம், விடக்கடி மருத்துவம், பிரசவ வைத்தியம் போன்ற சிறப்பு மருத்துவத்துறைகள் சார்ந்தனவாகவும் காணப்படுகின்றன. இவ்வாய்விலிருந்து இலங்கையில் தமிழ் மருத்துவம் மருத்துவத்தின் பல்துறைகளினும் சிறப்புற்று விளங்கியுள்ளமை பற்றித் தெளிவாக அறியக்கூடியதாகவுள்ளது.*

***திறவுசொற்கள்:*** *புலத்தியர், தமிழ் மருத்துவநூல்கள், பரராசசேகரம், செகராசசேகரம், ஏட்டுச்சுவடி.*

## அறிமுகம்

பண்டைக் காலந்தொட்டு இலங்கையில் சுதேச மருத்துவ முறையானது வழக்கில் இருந்து வந்துள்ளது. இராவணனின் பாட்டனான புலத்தியர் மூலிகை மருத்துவத்தில் சிறந்து விளங்கியதுடன் சிவகிரி என்று அழைக்கப்படும் சிகிரியாவில் மருத்துவ மாநாடு ஒன்றையும் நடாத்தியுள்ளார் என்று அறியக்கிடக்கிறது[1]. ஆயினும் சித்தர் மரபில் வைத்து எண்ணப்படும் புலத்தியரும் இவரும் ஒருவரா என்பதில் தெளிவில்லை. அகத்தியருக்கும் உலோபாமுத்திரைக்கும் புதல்வராகத் தோன்றிய புலத்தியர் பற்றிய வரலாறும் உள்ளது[2]. புலத்தியர் வைத்தியம் என்னும் நூல் புலத்தியரால் இயற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது[3].

புலத்தியரின் பேரனான இராவணன் சிறந்த வைத்தியனாகவும் விளங்கியுள்ளான். இமயமலையில் நடைபெற்ற மருத்துவ மாநாடு ஒன்றில் இராவணன் கலந்து கொண்டதாகக் கூறப்படுகிறது[4]. எனவே, இராவணனுக்கும் அவன் காலத்தில் இலங்கையில் இருந்த வைத்தியர்களுக்கும் இமயமலையின்கண் இருந்த மூலிகை களைப் பற்றிய தெளிவான அறிவும் இருந்துள்ளது. இந்திரசித்தின் பாணத்தால் மரணமூர்ச்சையடைந்திருந்த இலக்குவனைக் குணப்படுத்த இராவணனது ஆஸ்தான வைத்தியரான சுசேணனின் ஆலோச னைப்படியே அனுமன் சஞ்சீவி மூலிகையை இமயத்திலிருந்து கொண்டு வந்ததாக இராமாயணம் கூறுவது இதற்குச் சான்றாக அமைகின்றது5. இராவணனால் பல வைத்திய நூல்கள் இயற்றப்பட்டுள்ளன. அவற்றுள் குமாரதந்திரம், அர்க்கப்பிரகாசம், நாடிசாத்திரம் என்பன குறிப்பிடத்தக்கவை[6]. கி.மு.5100 ஆம் ஆண்டளவில்வாழ்ந்ததாகக் கருதப்படும் இராவணன் எந்த மொழியைப் பேசியிருப்பான், அவனால் இயற்றப்பட்ட நூல்கள் எந்த மொழியில் இருந்திருக்கும்? என்ற கேள்விகள் எழுவது இயல்பு. அது பற்றி என்.கே.எஸ். திருச்செல்வம் தமது "யார் இந்த இராவணன்?" என்ற நூலில் நுட்பமாக ஆராய்ந்து, அக்காலத்தில் தமிழ் மொழி வழக்கில் இருந்துள்ளமையையும், இராவணனது மொழி தமிழ்மொழியாக இருத்தல் வேண்டும் என்பதையும் சான்றுகளுடன் உறுதிப்படுத்தியுள்ளார்[7]. ஆயின் அது பற்றி விரித்துரைத்தல் இக்கட்டுரையின் நோக்கத்திற்கு அப்பாற்பட்டது. புலத்தியர், இராவணன் முதலானோர் தமிழ் மொழியில் வைத்திய நூல்களை இயற்றியுள்ளனர் என்பது மட்டும் ஈண்டு கவனத்திற் கொள்ளத்தக்கது. இராவணனால் இயற்றப்பட்ட குமாரதந்திரம் என்னும் குழந்தை மருத்துவ நூலில் இடம்பெற்றுள்ள சில பகுதிகள் மட்டும் ஜீவரட்சாமிர்தம் என்னும் நூலில் இடம் பெற்றுள்ளது[8]. ஏனைய நூல்கள் தற்காலத்தில் வழக்கிலுள்ளனவா என்று அறிய முடியாதுள்ளது.

இராவணன் காலத்துக்குப் பிறகு பலவித ஏற்ற இறக்கங்களுக்குள்ளான தமிழ் மருத்துவமானது கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு காலப்பகுதியில் யாழ்ப்பாண இராச்சியம் முதன்மை பெற்றதையடுத்து மீண்டும் சிறப்புற்று விளங்கியதை அறிய முடிகிறது. யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த தமிழ் மன்னர்கள் மூலிகைத் தோட்டங்களை அமைத்தும், வைத்திய சாலைகளை நிறுவியும், வைத்திய சம்பந்தமான ஏட்டுச்சுவடிகளைச் சேகரித்தும், வைத்திய அறிஞர்களைக்கொண்டு வைத்திய நூல்களை இயற்றியும் தமிழ் வைத்திய வளர்ச்சிக்குப் பெருந்தொண்டாற்றியுள்ளனர். பரராசசேகர வைத்தியம், செகராசசேகர வைத்தியம் ஆகிய ஒப்பற்ற தமிழ் வைத்திய நூல்கள் இக்காலத்தில் வெளியானவையாகும்.

கிபி. பதினேழாம் நூற்றாண்டிலிருந்து இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை இலங்கை வெளிநாட்டு அந்நியர்களான போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோரின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. அக்காலத்திற்கூடத் தமிழ் வைத்தியம் இலைமறை காயாக வளர்ச்சியடைந்ததுடன் அரிய சில தமிழ் மருத்துவ நூல்களும் ஆக்கம் பெற்றுள்ளன. கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலப்பகுதியில் அச்சுயந்திரம் அறிமுகமானதைத் தொடர்ந்து ஏட்டுச்சுவடிகளில் இருந்த தமிழ் நூல்கள் அச்சில் பதிப்பிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. தமிழ் மருத்துவ நூல்களும் கணிசமான அளவில் அச்சுவாகனம் ஏறின. அதன் பயனாகத் தமிழ் வைத்திய நூல்கள் புதிய பரிணாமத்துடன் பலரின் கைகளுக்கும் கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

### ஆய்வின் நோக்கம்

இந்த ஆய்வானது யாழ்ப்பாண அரசர் காலத்திலிருந்து ஆங்கிலேயர் காலம் வரை (1948) இலங்கையில் வெளியான தமிழ் மருத்துவ நூல்கள் பற்றி ஆராய்ந்து அவற்றை ஆவணப்படுத்தும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்டது.

### ஆய்வு முறையியல்

இது ஓர் இலக்கிய ஆய்வாகும். ஆய்வு உபகரணமாக இலங்கையில் வெளியான தமிழ் மருத்துவ நூல்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்திலுள்ள மருத்துவ ஏட்டுச்சுவடிகள், மற்றும் அவை சார்ந்த நூல்கள் என்பன அமைகின்றன.

### பெறுபேறுகளும் கலந்துரையாடலும்

இலங்கையில் வெளிவந்த தமிழ் மருத்துவ நூல்களை அவற்றின் சிறப்பு அல்லது உள்ளடக்கம் கருதி

(அ) அங்காதிபாத நூலகள்

(ஆ) நயனவிதி நூலகள்

(இ) குழந்தை மருத்துவ நூல்கள்

(ஈ) விடவைத்திய நூலகள்

(உ) பிரசவ வைத்திய நூல்கள்

(ஊ) பதார்த்த குண விளக்க நூல்கள்

(ஐ) பொதுமருத்துவ நூல்கள்

என்னும் பிரிவுகளின் கீழ் நோக்குவது பொருத்தமுடையது. எனினும் பரராச சேகர வைத்தியம், செகராச சேகர வைத்தியம் ஆகிய இரு நூல்களையும் அவற்றின் பெருமை கருதித் தனித்தனியாக ஆராயப்பட்டுள்ளன.

### செகராச வைத்தியம்

தற்போது காணக் கிடைத்துள்ள தமிழ் வைத்திய நூல்களுள் செகராசசேகர வைத்திய நூலே மிகவும் பழமையானதாகும்[9]. செகராசசேகர மன்னன் காலத்தில் இயற்றப்பட்ட இந்நூல் நான்காயிரம் பாடல்களைக் கொண்டதாகவும் அந்தாதி முறையில் அமைந்துள்ளதாகவும் கூறப்படுகின்ற போதிலும் 1511 பாடல்கள் வரையிலேயே அச்சில் பதிப்பிக்கப்பட்டுள்ளன. இந்நூலை ஏட்டுச்சுவடியிலிருந்து 1932 ஆம் ஆண்டு அச்சிற் பதிப்பித்தவர் அச்சு வேலியைச் சேர்ந்த ச.தம்பிமுத்துப்பிள்ளை என்பவராவார்[10]. ஐ.பொன்னையா என்பவரும் இந்நூலைப் பதிப்பித்துள்ளதாகக் கூறப்படுகின்ற போதிலும் அந்நூல் காணக் கிடைத்திலது. நா.கணேசலிங்கநாதன் என்பவர் செகராசசேகர வைத்தியத் திறவுகோல் என்ற பெயரில் இந்நூலுக்கு உரையெழுதி வெளியிட்டுள்ளார்[11] சுரம், சன்னி, மூலரோகம், விக்கல், சுவாதம், வாதரோகம், கசரோகம், கரப்பன், வலிப்பு, உதரரோகம், நீரிழிவு, பிளவை, பித்தரோகம் முதலான பொது மருத்துவமுறைகளே இந்நூலில் பெரிதும் இடம்பெற்றுள்ளன.

### பரராசசேகர வைத்தியம்

யாழ்ப்பாணத்தை அரசாண்ட பரராசசேகர மன்னன் காலத்தில் வெளிவந்த இந்நூலானது மிகப்பெரிய தமிழ் வைத்திய நூலாகும். பன்னீராயிரம் பாடல்களைக் கொண்ட இந்நூல் பரராசசேகரம் பன்னீராயிரம் என்றும். பரராசசேகரமாலை என்றும் வழங்கப்படுகிறது[12]. ஏட்டுச் சுவடியில் இருந்து இந்நூலை 1928 - 36 காலப்பகுதியில் ஐ.பொன்னையா என்பவர் ஏழு பாகங்களாக அச்சில் பதிப்பித்துள்ளார். அவற்றின் விபரம் வருமாறு -

பரராசசேகரம் - முதலாம் பாகம் - சிரரோகநிதானம். இதில் சிரசு, மூளை, கண், காது, மூக்கு, உதடு, நாக்கு, வாய், பற்கள், தொண்டை, கழுத்து முதலான உறுப்புகளில் ஏற்படும் நோய்களும் அவற்றுக்கான சிகிச்சை முறைகளும் கூறப்பட்டுள்ளன[13].

பரராசசேகரம் - இரண்டாம் பாகம் - கெர்ப்பரோகநிதானம், பாலரோநிதானம். இதில் பெண்கள், கர்ப்பிணிகள் மற்றும்

குழந்தைகளுக்கு ஏற்படக்கூடிய நோய்களும் அவற்றுக்கான சிகிச்சை முறைகளும் கூறப்பட்டுள்ளன[14].

பரராசசேகரம் - மூன்றாம்பாகம் - சுரம் சன்னிரோகநிதானம் - சுரம், சன்னி, விக்கல், சத்தி, வலிப்பு முதலிய நோய்களும் அவற்றுக்கான சிகிச்சை முறைகளும் இதில் கூறப்பட்டுள்ளன[15].

பரராசசேகரம் - நான்காம் பாகம் - வாத பித்த சிலேற்பனரோக நிதானங்கள் வாதம், பித்தம், கபம் என்பவற்றால் ஏற்படக்கூடிய நோய்களும் அவற்றுக்கான சிகிச்சை முறைகளும் இதில் கூறப்பட்டுள்ளன[16].

பரராசசேகரம் ஐந்தாம் பாகம் - மேகரோக நிதானம் - மேகரோகம், பிரமேகம், சலக்கழிச்சல், பிளவை, பவுந்திரம், வன்மங்கள், யந்திர சத்திரவிதி, இரட்சைவிதி முதலியன பற்றி இதில் கூறப்பட்டுள்ளன[17].

பரராசசேகரம் - ஆறாம்பாகம் - உதரரோக நிதானம் - வயிற்றில் ஏற்படக்கூடிய நோய்கள், சோகை, பாண்டு, காமாலை, குன்மம், வாய்வு, சூலை முதலிய நோய்களும் அவற்றுக்கான சிகிச்சை முறைகளும் இதில் கூறப்பட்டுள்ளன[18].

பரராசசேகரம் - ஏழாம் பாகம் - மூலரோகநிதானம் - மூலரோகம், அதிசாரம், கிராணி, கரப்பன், கிரந்தி, குட்டம் முதலிய நோய்களும் அவற்றுக்கான சிகிச்சை முறைகளும் இதில் கூறப்பட்டுள்ளன[19].

ஆயினும் ஐ.பொன்னையா அவர்களின் பதிப்பை முழுமையானது என்று கூறுவதற்கில்லை. பன்னீராயிரம் பாடல்களைக் கொண்ட பரராசசேகரத்தில் ஆறாயிரத்துக்கம் குறைவான பாடல்களே அச்சில் பதிப்பிக்கப்பட்டுள்ளன. பரராசசேகரத்தின் சில பகுதிகளுக்கு வ.சிவப்பிரகாசம் அவர்கள் உரையெழுதியுள்ளார்[20]. சே.சிவசண்முகராஜா அவர்கள் வாதரோகம் வரையிலான நான்கு பாகங்களுக்கும் உரையெழுதிச் செம்பதிப்பாக 2018 ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார்[21].

**அங்காதிபாதம்**

அங்காதிபாதம் என்றால் “உடற்கூற்றியல்” என்று தற்கால அறிவியலாளர்கள் கூறுவர். யாழ்ப்பாணம் மானிப்பாயில் மருத்துவப் பணியாற்ற வந்த அமெரிக்கரான டாக்டர் சாமுவேல் கிறீன் 1852 ஆம் ஆண்டு கல்வின் கற்றரின் அனாற்றமி[22] என்னும் ஆங்கில நூலைத் தமிழாக்கம் செய்து வெளியிட்ட போதும், 1872 ஆம் ஆண்டு கிரேயின் அனாற்றமி[23] நூலைத் தமிழாக்கம் செய்து வெளியிட்ட போதும் அவற்றிற்கு அங்காதிபாதம் என்றே பெயரிட்டுள்ளார். ஆனால் புராதனமான தமிழ் மருத்துவத்தில் அங்காதிபாதம் என்ற சொல்லுக்கு ஆழமான கருத்து உள்ளது. தமிழ் மருத்துவ அங்காதிபாத நூல்கள் தனித்து உடற்கூறுகளை மட்டும் கூறும் நூல்களாக அமையவில்லை. அத்துடன் உடற்றொழிலியல், உடல் தத்துவங்கள், மற்றும் சித்தமருத்துவ மூலதத்துவங்களையும் மிகவும் நுட்பமாக எடுத்துக் கூறுவனவாக அமைந்துள்ளன. அதனாற்றான் போலும் அவை பற்றி எடுத்துக்கூறும் தமது நூலுக்கு “உடலறி விளக்கம்” என்று வைத்தியர் நமசிவாயம் அவர்கள் பொருத்தமாகப் பெயர் சூட்டியுள்ளார்[24].

அங்காதிபாதம் சார்ந்த இரண்டு நூல்கள் இலங்கையில் வெளிவந்துள்ளன. அவையாவன:

(அ) அங்காதிபாதம் (பரராசசேகரத்தைச் சார்ந்தது). பரராசசேகர மன்னன் காலத்தில் வெளிவந்த இந்நூலையும் ஏட்டுச்சுவடியில்

இருந்து ஐ.பொன்னையா அச்சில் பதிப்பித்துள்ளார். 1928 ஆம் ஆண்டு வெளியான முதற்பதிப்பில் 175 பாடல்கள் மட்டுமே காணப்படுகின்றன[25]. ஆயினும் 1936 ஆம் ஆண்டு இரண்டாம் பதிப்பாக அவரால் பதிப்பிக்கப்பட்ட அங்காதிபாதம் வாகட தத்துவத்துடன் என்ற நூலில் முதற்பாகமான அங்காதிபாதத்தில் 404 செய்யுட்களும், இரண்டாம் பகுதியான வாகட தத்துவத்தில் 402 பாடல்களும் காணப்படுகின்றன[26]. 1976 ஆம் ஆண்டு தியாகராசன் அவர்களால் பழநி வெளியீடாக வெளியிடப்பட்ட அங்காதிபாதம்[27] என்னும் நூலானது 1936 ஆம் ஆண்டு ஐ.பொன்னையா அவர்களால் பதிப்பிக்கப்பட்ட அங்காதிபாதத்தின் மறுபதிப்பாகவே கருத வேண்டியுள்ளது. இவ்விரு நூல்களுக்கம் இடையில் எவ்வித வேறுபாடுகளும் காணப்படவில்லை.

அங்காதிபாதம் - சித்தமருத்துவ அரிச்சுவடி என்ற பெயரில் இலங்கை கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பரம்பரை வைத்தியர் விநாயகமூர்த்தி என்பவரால் உரை எழுதப்பட்டு, 2010 ஆம் ஆண்டு ஒரு நூல் வெளி வந்துள்ளது[28]. இந்நூலும் ஐ.பொன்னையா அவர்களின் இரண்டாம் பதிப்பைத் தழுவியதாகவே காணப்படுகிறது.

(ஆ) அங்காதிபாதம் - செகராசசேகரம் - பரராசசேகரத்தைப்போலவே செகராசசேகர வைத்திய நூலும் அங்காதி பாதத்தைக் கொண்டதாக உருவாகியிருத்தல் வேண்டும். இதனைப் பா.சிவகடாட்சம் தமது பண்டைய மருத்துவமும் பயன் தரும் மூலிகைகளும் என்ற நூலில் உறுதிப்படுத்தியுள்ளார்[29].

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் சிதைவடைந்த நிலையிலுள்ள ஏட்டுச்சுவடி ஒன்றில் செகராசசேகரம் அங்காதிபாதத்தின் சில பகுதிகள் காணப்படுகின்றன. செகராச சேகரம் வைத்தியநூலின் ஆரம்பத்தில் அங்காதிபாதம் சம்பந்தமான சிலபகுதிகள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் இடம்பெற்றுள்ள பாடல் ஒன்று வருமாறு.

**"இயம்பிய குடலு மூனு மென்பு நாடிகளுமற்றுஞ்
செயம்பெறு சிங்கைநாடன் செகராசசேகரன்றா
னுயர்ந்தவாள் வடக்கராக முருட்டிய களத்தின் மீதே
அயஞ்சிறி துளது தீர அளந்து கண்டறிந்ததாமே"[30]**

அதாவது, சிங்கை நகரை ஆட்சிசெய்த செகராசசேகர மன்னன் யுத்தகளத்தில் இறந்துபட்ட எதிரி வீரர்களின் உடலை வெட்டிப் பிணப்பரிசோதனை செய்து, உடலுறுப்புகள் பற்றிய விபரங்களைத் திருத்தமாக அறிந்துகொண்டான் என்பது அதன் கருத்து. பண்டைத்தமிழரின் அறிவியல் ஆராய்ச்சிக்கு இதுவும் ஒரு சான்றாக அமைந்துள்ளது.

**நயனவிதி நூல்**

நயனவிதி அல்லது கண் மருத்துவம் சம்பந்தமான மூன்று நூல்கள் இலங்கையில் வெளிவந்துள்ளன. அவை மூன்றையும் சேர்த்து நயனவிதி குணமும் மருந்தும் என்ற பெயரில் அச்சுவேலி ஞானப்பிரகாச யந்திரசாலையில் 1904 ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டுள்ளது[31] பதிப்பாசிரியர் பெயர் குறிப்பிடப்பட்டில்லை. அதில் இடம்பெற்றுள்ள நூல்களாவன:

(அ)நாகமுனிவர் நயனவிதி - 216 பாடல்களைக் கொண்டது

(ஆ)இலங்கைச் சிங்கை மன்னன் நயனவிதி - 27 பாடல்களைக் கொண்டது.

(இ)பரராசசேகர நயனவிதி - 25 பாடல்களைக் கொண்டது.

ஐ.பொன்னையா இருநூறுக்கும் மேலான பாடல்களைக்கொண்ட இலங்கைச் சிங்கை மன்னன் நயனவிதி என்ற பெயரில் ஏட்டுச்சுவடி ஒன்று தன்னிடம் உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்[32]. ஆயினும் அச்சுவடி

இதுவரை அச்சிற் பதிப்பிக்கப்படவில்லை. யாழ்ப்பாணப்பல்கலைக்கழக நூலகத்தில் உள்ள 7ஆம், 91 ஆம் இலக்க ஓலைச் சுவடிகள் மேற்படி நயனவிதி நூல்கள் சம்பந்தமாக அமைந்துள்ளதை இக்கட்டு ரையாசிரியர் அவதானித்துள்ளார்[33]. அத்துடன் 7ஆம் இலக்க ஓலைச்சுவடியில் இதுவரை அச்சில் வெளிவராத நயனவிதி நூல் ஒன்றும் காணப்படுகிறது. அதில் 55 பாடல்களும் அவற்றைத் தொடர்ந்து வசன நடையிலும் நயனரோக மருத்துவம் கூறப்பட்டுள்ளது.

### குழந்தை மருத்துவ நூல்கள்

பரராசசேகரம் இரண்டாம் பாகத்தில் பாலர் ரோகநிதானம் என்ற பெயரில் குழந்தைகளுக்குண்டாகும் நோய்களும், அவற்றுக்கான சிகிச்சை முறைகளும் கூறப்பட்டுள்ளன. அதைத்தவிர பாலவைத்தியம் 34, பாலவைத்தியத்திரட்டு 35 ஆகிய இரு நூல்களும் குழந்தை மருத்துவ நூல்களாகும். இவற்றுள் பாலவைத்தியமானது சி.டபிள்யு சுப்பிரமணியபிள்ளை என்பவரால் 1889 ஆம் ஆண்டு முதற்பதிப்பாக வெளியிடப்பட்டது. 1931 ஆம் ஆண்டு இதன் மூன்றாம் பதிப்பு வெளிவந்துள்ளது. பாலவைத்தியத்திரட்டு க.வே.கந்தையாபிள்ளை என்பவரால் அட்சயவருடம் வெளியிடப்பட்டுள்ளது.

### விடவைத்தியநூல்கள்

விடவைத்தியம் அல்லது விடக்கடி சார்ந்த மூன்று நூல்கள் அச்சில் வெளிவந்துள்ளன. அவையாவன:

(அ) செகராசசேகரம் சர்ப்பசாஸ்திரம்

(ஆ) அமுதாகரம்

(இ) சித்தர் ஆரூட விடவைத்தியம்

இவற்றுள் செகராசசேகரம் சர்ப்பசாஸ்தி ரமானது செகராசசேகர மன்னன் காலத் திற்குரியது. இந்நூலின் எட்டாவது பாடலில் இடம்பெற்றுள்ள “இலங்கைவேந்தர் சீரிய பொன்திறை யளக்கச் செங்கோலோச்சுஞ் செகராசசேகர மன்னன் சிங்கைமேவு மாரியர்கோன்” என்னும் பாடல்வரிகள் மூலம் இம்மன்னன் தென்னிலங்கை அரசரை வென்று, அவர்கள் திறைசெலுத்த ஆட்சிசெய்துள்ளான் என்று யாழ்ப்பாணச் சரித்திரத்தில் செ.இராசநாயகம் அவர்கள் எடுத்துக் காட்டியுள்ளார்[36]. இந்நூலை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலுள்ள 29ஆம், 169ஆம் இலக்க ஏட்டுச் சுவடிகளிலிருந்து இக்கட்டுரையாசிரியர் அச்சிற் பதிப்பித்துள்ளார்[37].

அமுதாகரம் என்னும் விட வைத்திய நூலை இயற்றியவர் அ.வரதபண்டி தராவார். அவர் இற்றைக்குச் சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்னர் சுன்னாகம் என்னும் இடத்தில் வாழ்ந்தவராவார். இந்நூலைத் திருகோணமலையைச் சேர்ந்த சு.தம்பையா என்பவர் 1892 ஆம் ஆண்டு அச்சிற் பதிப்பித்துள்ளார்[38].

சித்தர் ஆரூட விட வைத்தியம் என்னும் நூல் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த பண்டிதர் நடராஜன் என்பவரால் யுவவருடம் வெளியிடப்பட்டுள்ளது[39]. 76 பக்கங்களைக் கொண்ட இந்நூலில் பல்வேறு விடக்கடிகள் பற்றியும் அவற்றிற்கான சிகிச்சைமுறைகளும் கூறப்பட்டுள்ளன.

இவற்றைவிட வட்டுக்கோட்டையைச் சேர்ந்த இராமசாமிஐயர் நாகேசஐயர் என்பவர் இற்றைக்கு 150 ஆண்டுகளுக்கு முன்னர் அமுதநுணுக்கம் என்னும் விடவைத்திய நூலை இயற்றியதாக அறியக்கிடக்கிறது[40]. ஆயின், அந்நூல் அச்சில் வெளிவந்ததாகத் தெரியவில்லை. யாழ்ப்பாணப்பல்கலைக்கழக நூலகத்திலுள்ள 29ஆம், 169ஆம் இலக்க ஏட்டுச் சுவடிகளில் செகராசசேகரம் சர்ப்ப சாஸ்திரத்துடன் சித்தராரூடம் - தெரிகவி என்ற பெயரில்

விட வைத்திய நூல் ஒன்று காணப்படுகிறது. அதுவும் இதுவரை அச்சிற் பதிப்பிக்கப் படவில்லை.

**பிரசவ வைத்தியம்**

பெண்ணோய்கள், மகப்பேற்று மருத்துவம் பற்றிப் பரராசசேகரம் இரண்டாம்பாகம் - கெர்ப்பரோகநிதானத்தில் கூறப்பட்டுள்ள போதிலும் மகப்பேற்றியல் தொடர்பாக மானிப்பாய் சி.டபிள்யு. சுப்பிரமணியபிள்ளை என்பவர் பிரசவ வைத்தியம் என்னும் தனிநூலை 1892 ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளார்[41]. இந்நூலில் அக்கால ஆங்கில வைத்தியமுறைகளுடன் பாரம்பரிய தமிழ் மருத்துவமுறைகளும் எழுதப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

**பொதுவைத்தியநூல்கள்**

இருபாலைச்செட்டியார்வைத்தியவிளக்கம்[42] (1927), சொக்கநாதர் தன்வந்திரியம்[43] (1933), வைத்தியசிந்தாமணி[44] (1934), வைத்தியத்தெளிவு[45] (1930) அகத்தியமகரிஷி அருளிய வைத்தியபுரணம் -20546, அனுபவ அவுடதங்களின் வைத்திய முறைகள்[46] (1926), சுதேசவைத்திய அவுடதத்திரட்டு[47] (1943), கிறித்தவ பண்டிதர் வைத்தியத்திரட்டு[48] ஆகிய வைத்தியநூல்கள் பொது மருத்துவம் தொடர்பான சிகிச்சை முறைகளைப் பெருமளவில் கொண்டவையாக வெளிவந்துள்ளன. வைத்திய விளக்கம், வைத்தியத்தெளிவு ஆகிய நூல்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருபாலையில் வாழ்ந்த செட்டியார் என்னும் வைத்தியராலும், சொக்கநாதர் தன்வந்திரியம் மாவிட்டபுரத்தில் வாழ்ந்த சொக்கநாதக்குருக்களினாலும் இயற்றப்பட்டவை என்று பதிப்பாசிரியர் ஐ.பொன்னையா அவர்கள் குறிப்பிட்டுள்ளார். வைத்திய சிந்தாமணி, சுதேச வைத்தியத்திரட்டு, கிறித்தவ பண்டிதர் வைத்தியத்திரட்டு என்பவற்றின் ஆசிரியர் யாவரென்பது அறியுமாறில்லை. அகத்தியர் அருளிய வைத்தியபுரணம்-205, சுதேசவைத்திய அவுடதத்திரட்டு ஆகிய நூல்களுக்கு இக்கட்டுரையாசிரியர் உரையெழுதி வெளியிட்டுள்ளார்[49-50]. கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டளவில் வைத்திய சிந்தாமணி என்னும் தமிழ் வைத்திய நூலைத் தழுவி “வைத்தியசிந்தாமணி பைச ராஜ்ஜசங்கிரக” என்னும் பெயரில் சிங்களமொழியில் வைத்தியநூல் ஒன்று ஆக்கப்பட்டதாக அறியக் கிடக்கிறது[51].

**பதார்த்த குணவிளக்கநூல்கள்**

பதார்த்தம் என்பது பதம் - சொல், அர்த்தம் - அறியப்படுவது என்று பொருள் கொள்ளப்படும். அதாவது, அறிவால்(ஞானத்தால்) அறியப்படுவது[52]. சித்தர்களாலும் ஞானிகளாலும் ஞானத்தால் அறிந்து கூறப்பட்ட விடயங்கள் பதார்த்தம் என்று இங்குக் கருதப்படலாம். தமிழ் மருத்துவத்தில் தாவர வர்க்கப் பொருட்கள், தாதுவர்க்கப் பொருட்கள், விலங்குவர்க்கப் பொருட்கள், கடல்தரு பொருட்கள் என்பன மருந்து தயாரிப்பதிற் பயன்படுத்தப் படுகின்றன[53]. அவைபற்றிய விபரங்களை இந்நூல்கள் எடுத்தியம்புகின்றன. இலங்கையில் வெளிவந்த பதார்த்த குணவிளக்க நூல்களில் ச.தம்பிமுத்துப்பிள்ளை தொகுத்து வெளியிட்ட பதார்த்தசாரம்[54] , இருபாலைச் செட்டியர் இயற்றிய பதார்த்த சூடாமணி[55] என்பன குறிப்பிடத்தக்கவையாகும்.

**நிகண்டுகள், அகராதிகள்**

இலங்கையில் அரியபல தமிழ்மருத்து வநூல்கள் வெளியாகியுள்ளபோதிலும் மருத்துவ நிகண்டுகள் ஏதும் தோற்றம் பெற்றதாக அறியமுடியவில்லை. எனினும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் உள்ள 180ஆம் இலக்க ஓலைச்சுவடியில் 45 ஏடுகளில் அபூர்வமான மருத்துவச் சொற்பதங்களுக்கான பொருள் விளக்கம்

கொடுக்கப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. மிகவும் சிதைவடைந்த நிலையிலுள்ள அச்சுவடி தமிழ் மருத்துவ அகராதி என்ற பெயரில் இக்கட்டுரையாசிரியரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது[56]. ஆயினும் புத்தளம் கற்பிட்டியில் பிறந்த சைமன் காசிச்செட்டி 1844ஆம் ஆண்டு மலையகராதி என்னும் மூலிகை அகராதியை வெளியிட்டுள்ளார்[57]. அந்நூல் 1861 ஆம் ஆண்டு எ.மாயாண்டிநாட்டார் என்பவரால் மீள்பதிப்புச் செய்யப் பட்டுள்ளது[58]. 1892 ஆம் ஆண்டு ராமசாமிநாயுடு அவர்களால் பதிப்பிக்கப் பட்ட வைத்திய மலையகராதி என்பது சைமன் காசிச்செட்டி அவர்களின் மலையகராதி என்பதே என்று ஞானம் பாலச்சந்திரன் அவர்கள் ஆதாரபுர்வமாக எடுத்துக்காட்டியுள்ளார்[59].

## முடிவுரை

கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணராச்சியம் சிறப்புற்றிருந்த காலத்திலிருந்து 1948 ஆம் ஆண்டு ஆங்கிலேயர் ஆட்சி இலங்கையில் முடிவுக்கு வந்த காலம் வரையான பகுதியில் இலங்கையில் பல தமிழ் மருத்துவ நூல்கள் தோற்றம் பெற்றுள்ளன. ஏட்டுச்சுவடிகளில் இருந்த பல தமிழ் வைத்திய நூல்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்து கணிசமான அளவில் அச்சில் பதிப்பிக்கப் பட்டுள்ளன. சில புதிய நூல்களும் அச்சிற் பதிப்பிக்கப்பட்டுள்ளன. தமிழர் பரம்பரை மருத்துவமானது குழந்தை மருத்துவம், மகப்பேற்று மருத்துவம், கண்மருத்துவம், விசக்கடி மருத்துவம், என்று பல்வேறு சிறப்பு மருத்துவ முறைகளையுடையதாக வளர்ச்சியடைந்து வந்துள்ளதை இலங்கையில் வெளியான மேற்படி தமிழ் மருத்துவ நூல்கள் மூலம் அறிந்துகொள்ளக் கூடியதாகவுள்ளது. இது தமிழரின் சுகாதார, ஆரோக்கியமுறைகளில் தமிழ் மருத்துவம் வகித்த முக்கிய பங்கினையும் எடுத்துக்காட்டுகிறது. ஆயினும், ஏட்டுச்சுவடிகளில் இருந்து பதிப்பிக்கப்பட்ட பரராசசேகரம், செகராசசேகரம், நயனவிதி முதலான நூல்கள் முழுமை பெறாதனவாக உள்ளன. அவற்றைச் சீர்செய்யக்கூடிய ஏட்டுச்சுவடிகளிற் பல கடந்த முப்பதாண்டு கால உள்நாட்டுப்போரின் விளைவாக அழிவடைந்து போயிருக்கக்கூடிய வாய்ப்புகள் உள. எனினும் கிடைக்கக்கூடிய ஏட்டுச் சுவடிகளையும், கையெழுத்துப் பிரதிகளையும் பயன்படுத்தி இந்நூல்களை இயன்றவரை முழுமைப்படுத்தினால் அதனால் தமிழ் மக்கள் மட்டுமன்றி ஏனையோரும் பெரும் பயன் பெறமுடியும்.

## உசாத்துணைநூல்கள்

1. திருச்செல்வம் என்.கே.எஸ்., (2018) - யார் இந்த இராவணன்? - அருந்ததி பதிப்பகம், கொழும்பு. பக்.7
2. உத்தமராயன் க.சு., (1992) - தோற்றக்கிரம ஆராய்ச்சியும் சித்த மருத்துவ வரலாறும் - தமிழ்நாடு அரசு வெளியீடு. பக்.341.
3. மேற்படி. பக். 342.
4. Wikramanayake T.W., (2002) – Food and Nutrition – Hector Kobbekaduwa Agrarian Research and Training Institute, Colombo-7. p.3.
5. வேங்கடகிருஸ்ணய்ங்கார் தி. (1989) - துளசி இராமாயணம் - வானதி பதிப்பகம், சென்னை-17. பக்.401
6. Wikramanayake T.W., (2002). p.3.
7. திருச்செல்வம் என்.கே.எஸ்., (2018) - யார் இந்த இராவணன்? பக்.325-332.
8. சுப்பிரமணிய பண்டிதர் - ஜீவரட் சாமிர்தம் பக்.228.
9. சிவசண்முகராஜா சே., (1993) - ஈழத்துச் சித்தமருத்துவ நூல்கள் ஓர் அறிமுகம் - சித்த மருத்துவ வளர்ச்சிக்கழகம், யாழ்ப்பாணம். பக்.42.

10. தம்பிமுத்துப்பிள்ளை ச. (பதிப்பாசிரியர்) செகராசசேகர வைத்தியம் - அச்சுவேலி ஞானப்பிரகாச யந்திரசாலை, 1932.
11. கணேசலிங்கநாதன் நா., (2009) செகராசசேகர வைத்தியத் திறவுகோல் - ஆயுர்வேதத் திணைக்களம், நாவின்ன, மகரகம.
12. மேற்படி ஈழத்துச் சித்தமருத்துவ நூல்கள் ஓர் அறிமுகம் பக்.7.
13. பொன்னையா.ஐ (பதிப்பாசிரியர்) (1928) - பரராசசேகரம் முதலாம் பாகம் -சிரோரோகநிதானம், சைவப்பிரகாச யந்திரசாலை, யாழ்ப்பாணம்.
14. பொன்னையா.ஐ (பதிப்பாசிரியர்) (1932) - பரராசசேகரம் இரண்டாம் பாகம் - கெர்ப்பரோக நிதானம், பாலரோகநிதானம்), ஏழாலை திருஞானசம்பந்தர் அச்சுயந்திரசாலை.
15. பொன்னையா.ஐ (பதிப்பாசிரியர்) (1932) - பரராசசேகரம் மூன்றாம்பாகம் - சுரம், சன்னிரோகநிதானம் , மல்லாகம் திருஞானசம்பந்தர் அச்சுயந்திரசாலை.
16. பொன்னையா. ஐ (பதிப்பாசிரியர்) (1934) - பரராசசேகரம் நான்காம் பாகம் - வாத, பித்த, கபரோகநிதானங்கள், மல்லாகம் திருஞானசம்பந்தர் அச்சுயந்திரசாலை.
17. பொன்னையா.ஐ (பதிப்பாசிரியர்) (1935) - பரராசசேகரம் ஐந்தாம் பாகம் - மேகரோகநிதானம், மல்லாகம் திருஞானசம்பந்தர் அச்சுயந்திரசாலை.
18. பொன்னையா.ஐ (பதிப்பாசிரியர்) (1935) - பரராசசேகரம் - ஆறாம்பாகம் - உதரரோகநிதானம், மல்லாகம் திருஞானசம்பந்தர் அச்சுயந்திரசாலை.
19. பொன்னையா.ஐ (பதிப்பாசிரியர்) (1936) - பரராசசேகரம் ஏழாம்பாகம் - மூலரோகநிதானம், மல்லாகம் திருஞானசம்பந்தர் அச்சுயந்திரசாலை.
20. சிவப்பிரகாசம் வ., (1998-99) - பரராசசேகரம் சுரரோகம், பாலரோகம், கெர்ப்பரோக நிதானங்கள் - இலங்கா சித்த - ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி, யாழ்ப்பாணம்.
21. சிவசண்முகராஜா சே., (2018) - பரராசசேகர வைத்தியம் - மூலமும் உரையும் - சித்தமருத்துவ வளர்ச்சிக் கழகம், யாழ்ப்பாணம்.
22. சாமுவேல் கிறீன் -(1852) கல்வின் கற்றரின் அங்காதிபாதம், சுகரணவாதம்
23. சாமுவேல் கிறீன் -(1872) கிரேயின் அங்காதிபாதம்
24. நமசிவாயம் கா., (1955) உடலறி விளக்கம் - யாழ்ப்பாணம்.
25. பொன்னையா ஐ., (1928) அங்காதிபாதம் - யாழ்ப்பாணம்.
26. பொன்னையாபிள்ளை ஐ. (பதிப்பாசிரியர்) (1936) அங்காதிபாதம்(வாகடதத்துவத்துடன்) - ஏழாலை திருஞானசம்பந்தர் அச்சுயந்திரசாலை,
27. தியாகராசன் இரா.,(பதிப்பாசிரியர்) (1976) - அங்காதிபாதம் - அருள்மிகு பழநி தண்டாயுதபாணி திருக்கோவில், சித்தமருத்துவ வெளியீட்டுக்குழு.
28. விநாயகமூர்த்தி வை.க., (2010) அங்காதிபாதம் எனும் சித்தவைத்திய அரிச்சுவடி - சண் அச்சகம், மட்டக்களப்பு
29. சிவகடாட்சம் பா., (1979) பண்டைய மருத்துவமும் பயன்தருமூலிகைகளும் - பேராதனை.பக். 60
30. மேற்படி செகராசசேகரம் பக். 3.
31. தம்பிமுத்துப்பிள்ளைச.(பதிப்பாசிரியர்) (19904) நயனவிதி குணமும் மருந்தும் - அச்சுவேலி ஞானப்பிரகாச யந்திரசாலை,
32. மேற்படி பரராசசேகரம் முதலாம் பாகம் - பக். 215
33. முருகவேள் யாழ்பல்கலைக்கழக ஏட்டுச்சுவடிகள் -
34. சுப்பிரமணியபிள்ளை ஊ.று. பால வைத்தியம் - அச்சுவேலி ஞானப்பிரகாச யந்திரசாலை, மூன்றாம் பதிப்பு. 1931
35. கந்தையாபிள்ளை க.வே., (அட்சயவருடம்) - பாலவைத்தியத்திரட்டு - அளவெட்டி.

36. இராசநாயகம் செ., (2003) யாழ்ப்பாணச்சரித்திரம் - ஏசியான் எடியுக்கேசனல் சேர்விஸ், நியு டெல்லி, சென்னை பக்.69
37. சிவசண்முகராஜா சே. (2012) செகராசசேகரம் சர்ப்பசாஸ்திரம்- மூலமும் உரையும் - யாழ்ப்பாணம்
38. தம்பையாபிள்ளை சு. (பதிப்பாசிரியர்) (1892) அமுதாகரம் - விக்டோரியா ஜூபி அச்சுக்கூடம், சென்னப்பட்டினம்
39. நடராஜன் (யுவவருடம்) - சித்தர் ஆரூட விடவைத்தியம் - யாழ்ப்பாணம்.
40. கணேசையர் சி., ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரிதம் - பக்.220
41. சுப்பிரமணியபிள்ளை பு.று. (1892) பிரசவ வைத்தியம் - அச்சுவேலி ஞானப்பிரகாச யந்திரசாலை.
42. பொன்னையாபிள்ளை ஐ. (பதிப்பாசிரியர்) (1927) இருபாலைச் செட்டியர் இயற்றிய வைத்தியவிளக்கம் என்னும் அமிர்த சாகரம், பதார்த்தசூடாமணி - சைவப்பிரகாசயந்திர சாலை, யாழ்ப்பாணம்,
43. பொன்னையாபிள்ளை ஐ. (பதிப்பாசிரியர்) (1933) சொக்கநாதர் தன்வந்திரியம் - ஏழாலை திருஞானசம்பந்தர் அச்சுயந்திர சாலை
44. பொன்னையாபிள்ளை ஐ. (பதிப்பாசிரியர்) (1932) வைத்தியசிந்தாமணி - ஏழாலை திருஞானசம்பந்தர் அச்சுயந்திரசாலை
45. பொன்னையாபிள்ளை ஐ. (பதிப்பாசிரியர்) (1930) வைத்தியத் தெளிவு - யாழ்ப்பாணம்
46. பொன்னையாபிள்ளை ஐ. (பதிப்பாசிரியர்) (1938) வைத்தியபுரணம் 205 - ஏழாலை திருஞானசம்பந்தர் அச்சுயந்திரசாலை,
47. (1943) சுதேசவைத்திய அவுடதத் திரட்டு - வயாவிளான் ஆனந்த அச்சகம்
48. ( ) கிறித்தவ பண்டிதர் வைத்தியத் திரட்டு, அச்சுவேலி ஞானப்பிரகாச யந்திரசாலை
49. சிவசண்முகராஜா சே. (2017) அகத் தியர் அருளிய வைத்தியபுரணம் 205 - மூலமும் உரையும் - சித்தமருத்துவ வளர்ச்சிக்கழகம், யாழ்ப்பாணம்.
50. சிவசண்முகராஜா சே., (2017) சுதேச வைத்திய அவுடதத்திரட்டு என்னும் யாழ்ப்பாணச் சித்தவைத்தியத்திரட்டு - சித்தமருத்துவ வளர்ச்சிக்கழகம், யாழ்ப்பாணம்.
51. மேற்படி பண்டைய மருத்துவமும் பயன்தரு மூலிகைகளும் பக்.
52. இராஜலட்சுமி ஜிநகுமார், தெய்வநாயகம் சி.கோ.(1992) மாகந்நதி ஆசாரியார் அருளிய பதார்த்தசாரம் - சரசுவதி மகால் நூலகம்ஈ தஞ்சாவுர். பக்.22
53. தியாகராஜன் ஆர்., (1992) குணபாடம் தாது சீவ வகுப்பு - இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி துறை, சென்னை.பக்1
54. தம்பிமுத்துப்பிள்ளை ச., (1928) பதார்த்த சாரம் - அச்சுவேலி ஞானப்பிரகாச யந்திரசாலை
55. .பொன்னையா ஐ. (1927) பதார்த்தசூடாமணி - சைவப்பிரகாச யந்திரசாலை, யாழ்ப்பாணம்.
56. சிவசண்முகராஜா சே., 2012) தமிழ் மருத்துவ அகராதி - சிவறஞ்சனம் பிறின்ரேர்ஸ், கோண்டாவில்
57. சைமன் காசிச்செட்டி (1844)- மலையகராதி
58. மாயாண்டிநாட்டார் எ. (1861) காசிச்செட்டியாரவர்கள் பதிப்பித்த மலையகராதி - கல்விச்சமுத்திர அச்சுக் கூடம்.
59. ஞானம் பாலச்சநதிரன் (2015) - சைமன் காசிச்செட்டியின் அகராதி முயற்சிகள் - ஞானம்வெளியீடு, கொழும்பு. பக்.5-19.